**கூரை மீதான சூரிய மின்வலு உற்பத்தி வரிசை கடன் செயற்திட்டம்- 2019**

கூரை மீதான சூரிய மின்வலு உற்பத்தி வரிசை கடன் செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிகளின் பயன்பாடு தொடர்பான கூற்று மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2018 செப்தெம்பர் 18 ஆம் திகதிய 3571-எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 03 ஆம் பட்டியலின் 27(அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நிதி மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் நிதி அமைச்சின் அபிவிருத்தி நிதித் திணைக்களம் செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவராகவும் உள்ளது. பிரதான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அபிவிருத்தி, மின்வலு உற்பத்தி இயலளவை முன்னேற்றுதல் மற்றும் நாட்டிலுள்ள சுற்றாடல் நிலைமைகளை மேம்படுத்துதல் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். அதிகரித்த கூரை மீதான சூரிய மின்வலு உற்பத்திக்கான கடன் நிதியளிப்பு, ஸ்தாபிக்கப்பட்ட கூரை மீதான சூரியசக்தி சந்தை உட்கட்டமைப்பு மற்றும் இலாபம் ஈட்டக்கூடிய உபசெயற்திட்ட குழாய்வரிசை மற்றும் நிதி மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு, பங்குபற்றும் நிதி நிறுவனங்கள் மற்றும் வணிக மற்றும் உள்ளூர் துறை வாடிக்கையாளர்கள் உள்ளடங்கிய அதிகரித்த பங்குதாரர்களின் இயலளவு மற்றும் விழிப்புணர்வு ஆகிய பெயர்களிலான மூன்று கூறுகளின் கீழ் செயற்திட்ட நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்படுகின்றன. செயற்திட்ட நிர்வாகக் கைநூலின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 7,550 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 50 மில்லியனானதுடன் இத் தொகை ஏடிபீ ஆல் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கப்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 ஏப்ரல் 17 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

கூரை மீதான சூரிய மின்வலு உற்பத்தி வரிசை கடன் செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அனைத்து பொருண்மையான விடயங்களையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிகளின் பயன்பாடு தொடர்பான கூற்று உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிகளின் பயன்பாடு தொடர்பான கூற்றை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

-----------------------------------------------------------------------------------------------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிகளின் பயன்பாடு தொடர்பான கூற்று விடுபட்டுள்ளதா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிகளின் பயன்பாடு தொடர்பான கூற்றிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிகளின் பயன்பாடு தொடர்பான கூற்றின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிகளின் பயன்பாடு தொடர்பான கூற்று பிரதிநிதித்துவம் செய்கின்றதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

**2. பௌதீக செயலாற்றல்**

**2.1 செயற்திட்டத்தை ஆரம்பிப்பதில் தாமதங்கள்**

| இல. | செயற்பாடுகள் | பட்டியலிடப்பட்ட ஆரம்பித்தல் திகதி | அமுல்ப்படுத்தல் திகதி | தாமதங்கள் | விளைவுகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | செயற்திட்ட கண்காணிப்பு பிரிவை ஸ்தாபித்தல் | 2017 யூலை | 2018 திசெம்பர் | 17 மாதங்கள் | செயற்திட்ட அமுல்ப்படுத்தலில் தாமதம் | செயற்திட்ட கண்காணிப்பு பிரிவை ஸ்தாபிப்பதற்கு முன்னர் கடன் உடன்படிக்கையை கைச்சாத்திடுவது அவசியமாகும். | பட்டியலிடப்பட்டவாறு செயற்திட்டக் கூறுகள் அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |
| 02 | கடனை கைச்சாத்திடுதல் | 2017 ஒக்தோபர் | 2018 செப்தெம்பர் | 12 மாதங்கள் | -மேற்படி- | தாமதக் காலப்பகுதிக்கு மேலாக சட்டமா அதிபருடன் பல கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டியிருந்தது. | -மேற்படி- |

**2.2 செயற்திட்டத்தின் பௌதீக செயலாற்றல்**

| செயற்பாடு | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | தாமதம்/ கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் (அலகுகள்) | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் (அலகுகள்) | | | | |
| கடன்களை மீள்நிதியிடுதல் | 1162 | 1020 | 142 எண்ணிக்கையான கடன்கள் மீள்நிதியிடப்பட்டிருக்கவில்லை. | சூரிய மின்வலு உற்பத்தி தாமதம் | பாதீட்டு நிதியேற்பாடு போதாததன் காரணமாக மொத்த அங்கீகரிக்கப்பட்ட கடன் தொகை மீள்நிதியிடப்பட முடியாதிருந்ததுடன் இலங்கை மத்திய வங்கி 2019 திசெம்பர் 31 இற்கு முன்னர் கணக்குகளை மூடியிருந்தது. | பாதீட்டு நிதியேற்பாடுகளை முழுமையாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |